## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

-----

**IN THE COURT OF DISTIRCT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE COURT VEPPANTHATTAI**

| | |
|---|---|
| Calendar Case No: | CC 18/2022 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | அ.சா.1 |
| Name : | கலியமூர்த்தி |
| Husband/Father Name: | சின்னசாமி |
| Village : | வெங்கனூர் |
| Taluk : | வேப்பந்தட்டை |
| Age : | 36/2023 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 08.08.2023

**(எதிரி மணிகண்டன் ஆஜர். )**

**முதல் விசாரணை**

1 (i) நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் கேட்டரிங் முடித்துவிட்டு ஹோட்டலில் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை சம்பவத்திற்கு முன்பு எனக்கு தெரியாது. எனது பைக்கை திருடியது பின்னிட்டுதான் தெரியும். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். 21.05.2022-ம் தேதியன்று காலை 06.00 மணிக்கு வேப்பந்தட்டையில் உள்ள HDFC ATM முன்பு எனது பைக் TN 25 AR 0491 என்ற பதிவெண் கொண்ட Passion pro கருப்பு மற்றும் சிவப்பு நிறம் கலந்த இரு சக்கர வாகனத்தை நிறுத்திவிட்டு டீ சாப்பிட பக்கத்தில் இருந்த டீக்கடைக்கு சென்றிருந்தேன். பத்து நிமிடத்தில் திரும்பி வந்து பார்த்தபோது எனது பைக் காணாமல் போய்விட்டது. நானும், எனது மாமனார்-தங்கவேல், மணிவண்ணன், பாபு ஆகியோர் பாலையூர் ரோட்டில் போய் தேடிப்பார்த்தோம். காலை 06.45 மணிக்கு பாலையூர் ரோட்டில் வேப்பந்தட்டையில் இருந்து 2 கி.மீ. தூரத்தில் ஆஜர் எதிரி எனது வாகனத்தை ஓட்டிக்கொண்டு சென்றதை பார்த்து மடக்கி பிடித்து அரும்பாவூர் காவல் நிலையத்தில் எதிரியையும், திருடுபோன எனது பைக்கையும் ஒப்படைத்தோம். இது தொடர்பாக நான் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்பட்ட புகார் ஆவணம்தான் நான் கொடுத்தது. (அது **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.)

(ii) என்னிடம் காட்டப்படும் வழக்குச் சொத்து எண் 23/2022 –ல் சொத்தின் புகைப்படத்தில் உள்ள இரு சக்கர வாகனம்தான் திருடுபோன எனது இரு சக்கர வாகனம் ஆகும். (மேற்படி புகைப்படம் **அ.சா.பொ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.) போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

2. (i) எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை. குறுக்கு விசாரணை செய்ய போதுமான வாய்ப்பு அளிக்கப்பட்டது. குறுக்கு விசாரணை செய்ய முன்வரவில்லை. எனவே குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

**மறு விசாரணை :** இல்லை

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

-----

**IN THE COURT OF DISTIRCT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE COURT VEPPANTHATTAI**

| | |
|---|---|
| Calendar Case No: | CC 18/2022 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | அ.சா.2 |
| Name : | தங்கவேல் |
| Husband/Father Name: | காசி |
| Village : | வேப்பந்தட்டை |
| Taluk : | வேப்பந்தட்டை |
| Age : | 48/2023 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 08.08.2023

**(எதிரி மணிகண்டன் ஆஜர். )**

**முதல் விசாரணை**

1 (i) நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் அரசு மாணவர் விடுதியில் சமையலராக வேலை பார்த்து வருகிறேன். அ.சா.1– கலியமூர்த்தி எனது மருமகன் ஆவார். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். ஆஜர் எதிரியை சம்பவத்திற்கு முன்பு எனக்கு தெரியாது. எனது மருமகனின் பைக்கை திருடியது பின்னிட்டுதான் தெரியும். 21.05.2022–ம் தேதியன்று காலை 06.00 மணிக்கு வேப்பந்தட்டையில் உள்ள HDFC ATM முன்பு எனது மருமகன் அவரது பைக் Passion pro கருப்பு மற்றும் வெள்ளை நிறம் கலந்த இரு சக்கர வாகனத்தை நிறுத்திவிட்டு டீ சாப்பிட பக்கத்தில் இருந்த டீக்கடைக்கு சென்றிருந்தார். நானும், டீ சாப்பிட்டுக்கொண்டிருந்தேன். அப்போது எனது மருமகனின் பைக்கை ஆஜர் எதிரி – மணிகண்டன் எடுத்துக்கொண்டு சென்றார். அதை பார்த்த நானும், எனது மருமகன்– கலியமூர்த்தி, மணிவண்ணன், பாபு ஆகியோர் பாலையூர் ரோட்டில் பின்தொடர்ந்து மடக்கி பிடித்தோம். பின்னிட்டு அரும்பாவூர் காவல் நிலையத்தில் எதிரியையும், திருடுபோன பைக்கையும் ஒப்படைத்தோம். இது தொடர்பாக எனது மருமகன்– கலியமூர்த்தி புகார் கொடுத்தார். என்னிடம் காட்டப்படும் அ.சா.பொ.1–புகைப்படத்தில்

உள்ள இரு சக்கர வாகனத்தைதான் எதிரி திருடிச்சென்றார். போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

2. (i) எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை. குறுக்கு விசாரணை செய்ய போதுமான வாய்ப்பு அளிக்கப்பட்டது. குறுக்கு விசாரணை செய்ய முன்வரவில்லை. எனவே குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

**மறு விசாரணை :** இல்லை